(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 141.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2026 ஏப்ரல் 07, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ அநுர குமார திசாநாயக்க,** இலங்கைச் சனநாயகச் சோசலிச குடியரசின் சனாதிபதி

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ (திருமதி) சரோஜா சாவித்திரி போல்ராஜ்,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ வசந்த சமரசிங்க,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ விஜித ஹேரத்,** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன,** வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க குணசேகர,** நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) பிரசன்ன குணசேன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ எண்டன் ஜயகொடி,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ நிசாந்த ஜயவீர,** பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ சுகத் திலகரத்ன,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

**கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப்,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ முனீர் முலாபர்,** சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ருவன் ரணசிங்க,** சுற்றுலா பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ஹங்சக விஜேமுணி,** சுகாதார பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நாமல் சுதர்சன,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அரவிந்த செனரத்,** காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

**கௌரவ பி. ருவன் செனரத்,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

**கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அருண் ஹேமச்சந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

---

**கௌரவ அஜித் அகலகட**

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம**

**கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம**

**கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ எம்.கே. எம். அஸ்லம்**

**கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி**

**கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி**

**கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி**

**கௌரவ பீ. ஆரியவங்ஷ**

**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க**

**கௌரவ கே.இளங்குமரன்**

**கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை**

**கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி**

**கௌரவ உபுல் கித்சிறி**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே**

**கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்**

**கௌரவ வசந்த புஷ்ப குமார**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி**

**கௌரவ மனோ கணேசன்**

**கௌரவ லசித் பாஷண கமகே**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலூஷா லக்மாலி கமகே**

**கௌரவ அஜந்த கம்மெத்தெகே**

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ கயான் ஜனக

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன

கௌரவ சந்தன தென்னகோன்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சுஜீவ திசாநாயக்க

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ சுசந்த குமார நவரத்ன

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ கந்தசாமி பிரபு

கௌரவ அமில பிரசாத்

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ நந்த பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ ஜகத் மனுவர்ண

கௌரவ தாஹிர் மரிக்கார்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே.காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ சானக மாதுகொட

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ

கௌரவ ஆர்.எம். சமந்த ரனசிங்ஹ

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ அசோக சபுமல் ரன்வல

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ சுனில் றாஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன

கௌரவ ருவன் விஜேவீர

கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான

கௌரவ ஜகத் விதான

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ அதுல வெலதகொட

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

**கௌரவ பஸ்மின் சரீப்**

**கௌரவ திலிண சமரகோன்**

**கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர**

**கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்**

**கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத்**

**கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார**

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ தினேஷ் ஹேமந்த**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்**

**கௌரவ ரியாஸ் பாருக்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சனாதிபதியின் செய்திகள்:** சனாதிபதியிடமிருந்து கிடைத்த பின்வரும் செய்தியைகளைச் சபாநாயகர் வாசித்தார்:—

I

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/7/IX/21

2026 மார்ச் மாதம் 28 ஆம் திகதி

**கௌரவ ஜ.டப்ளியூ.எம். ஜகத் விக்கிரமரத்ன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆந் திகதியன்று செய்யப்பட்ட பிரகடனத்தின்மூலம் மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பகுதியின் ஏற்பாடுகள் இலங்கை முழுவதும் இரண்டாயிரத்து இருபத்தாறாம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென என்னால் பிரகடனப்படுத்தப்பட்டது.

மேலே சொல்லப்பட்ட பிரகடனத்தை மேற்கொள்ளுவதற்கான காரணம் டிட்வா சூறாவளி காரணமாக ஏற்பட்டுள்ள அனர்த்தத்திற்கு பின்னரான நிலைமை கருதி, நாட்டின் அமைதியைப் பாதுகாத்தல் மற்றும் பொதுமக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகளைக் கொண்டுநடத்துவதற்காகவென அரசியலமைப்பின் 155 ஆவது உறுப்புரையின் (4) ஆவது துணை உறுப்பின் பிரகாரம் செயற்பட்டு பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படுகின்றது.

இங்ஙனம் - அன்புள்ள

அநுர குமார திசாநாயக்க
சனாதிபதி

**II**

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
**President of Sri Lanka**

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/7/IX/3/01

2026 மார்ச் மாதம் 27 ஆந் திகதி

**கௌரவ ஜ.டபிள்யு.எம். ஜகத் விக்கிரமரத்ன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்படும் ஆயுதந்தாங்கிய படையின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்பட்ட பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

அநுர குமார திசாநாயக்க
சனாதிபதி

**2. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார் :—

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், 'உண்ணாட்டரசிறை (திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன் ."

**3. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2024 ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஒன்பதாவது தொகுதியின் XXXI மற்றும் XXXII ஆம் பகுதிகளைச் சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பத்தாவது தொகுதியின் – லக்விஜய மின் உற்பத்தி நிலையத்திற்காக லங்கா நிலக்கரி கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட நிலக்கரி கொள்வனவு செயன்முறை மற்றும் 2025 / 2026 காலப்பகுதிக்கான நிலக்கரி பெறுகைகள் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்—

(i) 2024 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ் கோப்பரேஷன் லிமிடெட்டின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய லொத்தர் சபையின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்—

(i) 2024 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(iii) 2024 ஆம் ஆண்டுக்கான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(iv) 2024 ஆம் ஆண்டுக்கான இலங்கை பௌத்த மற்றும் பாலிப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(v) 2024 ஆம் ஆண்டுக்கான இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் —

(i) 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய சனாதிபதி அவர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2026 மார்ச்சு 28 ஆம் திகதிய 2481/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனம்;

(ii) 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 24(4) ஆம் பிரிவு மற்றும் 2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் 2025 ஒக்டோபர் 03 ஆந் திகதி முதல் 2025 டிசம்பர் 31 வரையான "வீரமன்ட் நடவடிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டு மாற்றல்" தொடர்பான தகவல் அறிக்கையிடல்;

(iii) 2025 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் 2026.02.02 முதல் 2026.02.27 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் அபிவிருத்திச் செயற்பாடுகள் நிகழ்ச்சித்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு; மற்றும்

(iii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீடத்தின் துறைகளை நிறுவுதல் தொடர்பில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 திசெம்பர் 03 ஆம் திகதிய 2465/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி ஆவணம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமென கட்டளையாயிற்று.

(6) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையையும் கணக்குகளையும் சமர்ப்பித்து, அவ்வறிக்கை மற்றும் கணக்குகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர், 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவுகள் 18, 24, 28 மற்றும் 30 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, சொல்லப்பட்ட சட்டத்தின் 44 ஆம் பிரிவின் (எ) மற்றும் (ஒ) பந்திகளின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 17 ஆம் திகதிய 2471/68 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து, அவ்வொழுங்குவிதிகள் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர், (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 21, 22, 23, 24 மற்றும் 24அ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 05 ஆம் திகதிய 2470/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து, அவ்வொழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர், அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தொடர்பான விடயங்கள் பற்றி பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 120(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேயிலை சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ சுனில் குமார கமகே அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 34 ஆம் பிரிவின் கீழ், தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியல் 2026 தொடர்பாக இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 16 ஆம் திகதிய 2471/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா சார்பாக அக்குழுவின் உறுப்பினர் சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் பிரிவு 3 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 4ஊ இன் கீழான ஒழுங்குவிதி (2026 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2474/66 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது);

(ii) 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 7(1)(இ) மற்றும் பகுதி VI என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105

ஆம் பிரிவின் கீழான விதிகள் (2026 சனவரி 30 ஆம் திகதிய 2473/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது); மற்றும்

(iii) சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டமூலம்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ எஸ்.எம். மரிக்கார் அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, கடந்த காலத்தில் ஏற்பட்ட தித்வா சூறாவளி காரணமாக பகிரங்க நிறுவனங்களுக்கும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும் ஏற்பட்ட சேதங்களும் அவற்றுக்கு வழங்கப்பட வேண்டிய தீர்வுகளும் தொடர்பான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**5. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) புத்தல, உனாவட்டுன, மஹாநாக மாவத்தை, ‘சத்துட்ட’ எனும் முகவரியில் வதியும் திரு. ஆர்.எம்.பி.ஆர். ரத்னநாயக்கவினது 2025.10.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) கண்டி, அஸ்கிரிய, வாரியபொல ஸ்ரீ சுமங்கல மாவத்தை, இல. 29/4 இல் வதியும் திரு. எஸ்.பீ. ரத்னநாயக்கவினது 2025.08.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ சமர்ப்பித்தார்.

(2) காலி, பனங்கல, கல்லந்தல, இல. 95/பீ யில் வதியும் திரு. ஜி.பி. மஹதுனினது 2025.12.17 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ரீ.கே. ஜயசுந்தர சமர்ப்பித்தார்.

(3) அவுலேகம – அவுலேகம, கொழம்ப கெதர எனும் முகவரியில் வதியும் திரு. எம். ஜயதிஸ்ஸவினது 2025.07.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சுஜீவ திசாநாயக்க சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**6. பாராளுமன்ற அமர்வு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டமூலம் :** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பிரேரித்தார்.

(மு.ப. 11.43 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(மு.ப. 11.58 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.47 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ கிட்ணன் செல்வராஜ் தலைமை தாங்குவாராக" என இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.06 மணிக்கு கௌரவ கிட்ணன் செல்வராஜ் தலைமை தாங்கினார்.)

"கௌரவ உபுல் கித்சிறி தலைமை தாங்குவாராக" என கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.06 மணிக்கு கௌரவ உபுல் கித்சிறி தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

தலைமைத்தாங்கும் உறுப்பினர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

1 ஆம் பக்கத்தில் 18 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"யூலை 1 ஆந் திகதிக்கு முன்னரான"";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1 ஆம் பக்கத்தில் 24 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

""(ஈ) 2026, யூலை 1 ஆந் திகதியன்று";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 24 முதல் 36 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் பக்கத்தில் 1 முதல் 5 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்” என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம்

4 ஆம் பக்கத்தில் 25 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“மற்றும் 2026, யூலை 1 ஆந் திகதிக்கு”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் பக்கத்தில் 1 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

““2026 யூலை 1 ஆந் திகதியன்று”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்” என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம்

4 ஆம் பக்கத்தில் 15 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“பதிலாக “2026 யூலை 1 ஆந் திகதிக்கு முன்னர்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 1 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

““7. 2026 மே 1 ஆந் திகதியிலிருந்து”.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்” என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக” என நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமைய சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**8. விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார் ,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 34 ஆம் பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியல்-2026 தொடர்பாக இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 16 ஆம் திகதிய 2471/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி:** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார் ,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் பிரிவு 3 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 4ஊ இன் கீழ் தகுதிபெறுவதற்கான அளவுகோல்களையும், வரி விலக்களிப்புகள் அல்லது வரிச் சலுகைகள் தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2474/66 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் விதிகள்:** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 7(1)(இ) மற்றும் பகுதி VI என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள் தொடர்பாக ஆளும் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 30 ஆம் திகதிய 2473/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துதல்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துதல் தொடர்பாக 2026 பெப்ரவரி 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் அறிக்கையின் பின்வரும் விதப்புரைகள் ஏற்றுக்கொள்ளப்படுமாக:-

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) ன் முதலாம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதற்கு:-

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளைப் பரிசீலிக்கும்போது பாரதூரமான நிதி மோசடிகள், இலஞ்சம் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குழு தீர்மானிக்குமிடத்து, அது தொடர்பான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவிடத்து, அதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய சம்பவங்களை நேரடியாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்கு குழுவினால் ஆற்றுப்படுத்தப்படலாம்.

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120(4) ன் முதலாம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதற்கு:-

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளைப் பரிசீலிக்கும்போது பாரதூரமான நிதி மோசடிகள், இலஞ்சம் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குழு தீர்மானிக்குமிடத்து, அது தொடர்பான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவிடத்து, அதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய சம்பவங்களை நேரடியாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்கு குழுவினால் ஆற்றுப்படுத்தப்படலாம்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்றது.

" 'பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துதல்' முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

தலைமைத்தாங்கும் உறுப்பினர் தலைமை தாங்கினார்.

பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வரும் திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) ன் முதலாம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதற்கு:-

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளைப் பரிசீலிக்கும்போது பாரதூரமான நிதி மோசடிகள், இலஞ்சம் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குழு தீர்மானிக்குமிடத்து, அது தொடர்பான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவிடத்து, அதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய சம்பவங்களை நேரடியாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்கு குழுவினால் ஆற்றுப்படுத்தப்படலாம்."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“புதிய நிலையியற் கட்டளை பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வரும் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

“தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120(4) ன் முதலாம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதற்கு:-

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளைப் பரிசீலிக்கும்போது பாரதூரமான நிதி மோசடிகள், இலஞ்சம் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குழு தீர்மானிக்குமிடத்து, அது தொடர்பான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவிடத்து, அதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய சம்பவங்களை நேரடியாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்கு குழுவினால் ஆற்றுப்படுத்தப்படலாம்.”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“புதிய நிலையியற் கட்டளை பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம் மீண்டும் கூடியது.

அதற்கமைய பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் புதிய பகுதி குழுநிலையில் மதிப்பிடப்பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

**12. இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2018):** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சார்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார் ,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 30(1) ஆம் பிரிவின் கீழ் 2025.02.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. ஒத்திவைப்பு**: “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 6.06 மணிக்கு தலைமைத் தாங்கும் உறுப்பினர் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2026 ஏப்ரல் 08 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.